**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

| | | |
|---|---|---|
| **S.நாகராஜன்**<br>**தலைவர்** | **K.சந்திரசேகரன்,B.A**<br>**பொதுச்செயலாளர்** | **B.தியாகராஜன், M.Com.,**<br>**நிதிச்செயலாளர்** |


கடித எண்: 22/19
25.01.2019

பெறுநர்,
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2

பெரும்மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தொழிலாளர்கள் தொடர்புடைய வாரிய ஆணைகளை தமிழில் வெளியிட வேண்டுகோள்.

********

மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் தொடர்புடைய ஆணைகள் ஆங்கிலத்தில் வெளியிடும் நடைமுறைகள் தொடர்ந்த கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

உதாரணத்திற்கு விருப்ப ஊர்மாறுதல்கள் பெற்றிட விண்ணப்பம் சமர்ப்பிப்பது தொடர்புடைய வழிகாட்டுதல்கள் விண்ணப்ப படிவம், உள்முகத்தேர்வுகள் வழியாக நியமனம் பெற்றிடுவது தொடர்பான வாரிய ஆணைகள் ஆங்கிலத்தில் மட்டுமே வெளியிடப்படுகிறது.

வாரியத்தில் பணிபுரியும் ஊழியர்களுள் 50,000க்கும் மேற்பட்டவர் 3 மற்றும் 4ம் பணித்தொகுப்பைச் சார்ந்தவர்களாகவும், குறிப்பாக களப்பிரிவில் பணிபுரியும் பெரும்பாலான ஊழியர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களாக உள்ளனர். அவர்கள் தொடர்புடைய வாரிய ஆணைகள் ஆங்கிலத்தில் இடப்படுவதால் அத்தகையோர் பெருத்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே ஊழியர்கள் தொடர்பான வாரிய ஆணைகளை தமிழ் நாட்டின் ஆட்சிமொழியான தமிழில் வெளியிட ஆவன செய்திட வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் :
1. அமைப்புச்செயலாளர், சங்ககிரி
2. தலைவர், கோவை
3. செய்திமடல்.